RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22s135

# முல்லைக்கலி மக்களின் வாழ்வியல்

**அ. முருகலெட்சுமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ.எஸ்.இராமசாமிநாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Lifestyles of Mullaikali people

**A. Murugalakshmi [a, *]**

[a] Department of Tamil, Sri.S. Ramasamy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India.

* Corresponding Author: praganyasakthikm@gmail.com

Received: 26-03-2021
Revised: 31-01-2022
Accepted: 04-02-2022
Published: 26-02-2022

Check for updates

## ABSTRACT

Mullai people are the first to say that the pastor, the hunter, and the car and the evening define the time of the umbilical cord as the umbilical cord is located in the first place. Cholan Nalluruthiran has sung seventeen songs under the title Mullaikkali to add more specialty to the Mullaitivu department which has become so special. There Based on the interiors of pastoral residents who formed and lived their lives. This article describes the leader's wedding in Mullaikali, which is located in Ehl, and the climbing event that can be observed for it. The people of Mullai followed many customs in their lives. It may be noted that even today, the marriage practice of a few ethnic groups follows such customs.

**Keywords:** Mullaikali, Jallikkattu, Marriage, Hunter, Pastoral Residents.

## முன்னுரை

மானிடவியல் என்பது மனிதனின் நடத்தை முறை அறிவியலாகும். மனிதனைப்பற்றி ஆராயும் பிரிவே மானிடவியல் எனலாம்." மானிடத் தோற்றம், உடலியற்தோற்றம், பண்பாட்டுவளர்ச்சி, இனவகைப்பாடு, மனிதநம்பிக்கைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு மரபு சார்ந்த வெளிப்பாடு" என்று அகராதி விளக்கம் நல்குகிறது. மானிடவியலில் சமுதாயமானிடவியல், பண்பாட்டு மானிடவியல் என்ற இரு வகைகள் உள்ளன. பண்பாட்டு மானிடவியலில் பொருள் சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என்ற இரு பெரும் கூற்றுகள் இடம்பெறுகின்றன. பொருள்சார் பண்பாட்டில் மக்களால் செய்யப்பட்ட (உடைகள், அணிகலன்கள்) செய்பொருள்கள் மட்டுமே இடம் பெற்றிருப்பதால் அவை மானிடவியல் வழக்கில் கலைவடிவங்கள் பெறுகின்றன. பொருள் சாராப்பண்பாட்டில் "பொருள் வடிவம் பெறாதப் பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், இலக்கியங்கள், நம்பிக்கைகள், வழிபாட்டுமுறைகள் போன்ற மனவடிவங்கள் முழுவதும் இடம் பெறக்கூடும்" (Bhaktavatsala Bharathi, 2019). மானிடவியலாளர்கள் ஒவ்வொருவரும் தம் மனதளவில் உணரக்கூடிய பொருள் சாரா பண்பாட்டில் ஒரு செயல் தான் பழக்கவழக்கம். பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும் இது தனி மனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும் (Seyaraman, 2014). நனவுடன் தொடங்கிய ஒரு செயல் நாளடைவில் நனவின்றி நிகழக்கூடியதாக ஆகி விடுகிறது. இதனையே பழக்கம் என்கின்றனர். இப்பழக்கம் பின்னாளில் மரபு என்று உருமாறியது. மரபு என்ற கொள்கையின் அடிப்படையில் நம் தமிழர்கள் வாழையடிவாழையாக சில அறங்களைப் பின்பற்றி வருகின்றன. அவற்றில் ஒன்று சேரமான் கணைக்கால் இரும்பொறை மன்னன் தம் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வைக் கூறி தமிழ் இனத்தின் மறப்பண்பினை வெளிப்படுத்துகிறார். "குழவி இறப்பினும்; ஊன் தடி பிறப்பினும் ஆள் அன்று என்று

வாளின் தப்பார்” (Manikavasagan, 2007) என்ற பாடலில் பிள்ளை இறந்து பிறந்தாலும் பிறந்து இறந்தாலும் அதனையும் ஓர் உயிராகக் கருதி வாளால் கீறிப்புதைக்கும் வழக்கம் இருந்தது. விழுப்புண்ணோடு உயிர் துறப்பவர்க்கே சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடம் இருந்தது. “உறின் உயிர் அஞ்சா மறவர் இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்” போர் வந்தால் உயிரைத்துச்சமெனக் கருதி போர் செய்யத்துணியும் வீரர் என்றுப் புலப்படுத்துகிறது (Varadharasan, 2004). முல்லைக்கலி, ஜல்லிக்கட்டு, திருமணம், மக்கள், வேட்டைக்காரன், ஆயர்குடியிருப்பாளர்கள்.

## முல்லைநிலத்தில் இருந்து வேறுபட்டது முல்லைக்கலி

முல்லை நிலத்தில் இயல்பாக இருப்பது போன்று தலைவன் பாசறை செல்லுதல் தலைவிபிரிவு துயரத்தில் வருந்துதல் என்பது போல் அல்லாமல் சற்று மாறுபட்டு இருக்கிறது. குரவையாடுதல், திருமாலை வாழ்த்துதல், பாண்டிய மன்னனை வாழ்த்துதல், ஏறுதழுவுதல் போன்ற புதிய செய்திகள் இடம் பெறுகின்றன “. முல்லைக்கலியில் இழிந்தோர் வாழ்வே பாடப்படுகிறதென்பர்” முல்லைத்திணையில் இருந்து வேறுபட்ட முல்லைக்கலியில் வாழும் மக்கள் பல பழக்கவழக்கங்களைக் கையாளுகின்றனர். அவற்றில் முக்கியமான ஒரு பழக்கம் ஏறுதழுவுதல் நடைபெற்ற பின்பு திருமணம் நடைபெறுதல். இந்நிகழ்வின் மூலம் முல்லைநிலத் தலைவனின் வீரம் வெளிப்படுகிறது.

## முல்லைக்கலியில் நடைபெறும் திருமணமச்சடங்கு

இல்லறத்தில் திருமணம் என்பது மனிதப்பண்பாடு. அன்பின் ஐந்திணை வாழ்வினைச் செம்மையாகச் செயல்படுத்த மண உறவு மிகமிகத்தேவை. தலைவனும், தலைவியும் இணையும் இல்வாழ்க்கையில் அன்பைப் பண்பாகவும், அறத்தைப் பயனாகவும் கொண்டு வாழ்வதே சிறந்தப்பண்பாகும். வேங்கைப் பூக்கும் காலம் திருமணம் நடத்துவதற்கு உரிய காலம், முல்லைநிலமக்கள் வேங்கை மரத்தின் கீழிருந்து திருமண முடிவு செய்வர் “மன்றல் வேங்கைக் கீழ் இருந்துமணம்நயந் தன்ன” திருமணமுடிவுக்கு வேங்கை மரம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உணர்த்துவதாக இப்பாடலடிகள் அமைந்துள்ளன (Puliyur Kesiken, 2019). பழந்தமிழர் சமுதாயத்தில்தாய் வழிச் சமூகம் வாயிலாக திருமணம் பெண்வீட்டில் நடைபெறுவதே வழக்கமாக இருந்துள்ளது என்பதை, “வதுவையும் ஈங்கே அயர்ப” பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன (Puliyur Kesiken, 2019). களவு மணமானாலும் கற்பு மணமானாலும் ஏறு தழுவியப் பிறகே திருமணங்கள் முல்லை நிலத்தில் நடைபெற்றன. பெண்கள் திருமண வயதடைந்தவுடன் மணமகன் தேர்விற்காக ஏறு தழுவுதல் விழா பற்றி பறையறைதல் நடைபெறும். களிறுஇ முதலை முதலிய விலங்கினங்கள் அடைக்கப்பட்டிருக்கும் குகை போன்று தொழுவம் அமைந்திருக்கும். தொழுவத்தை ஒட்டி பரண் அமைக்கப்பட்டிருக்கும் அதன் மீது பெண் குடும்பத்தார்இ ஊர் மக்கள் அனைவரும் காத்திருப்பர். பறை அறைதலைத் தொடர்ந்து ஏறு தழுவுதல் நடைபெறும். தொழுவம் நறுமணப்புகையிட்டு இறைவழிபாடுகள் செய்யப்படும் காளைகளும் வீரர்களும் போரிடம் களம் இருபெரும் வேந்தர்கள் போரிடும் போர்க்களம் போலக் காட்சிதரும் எனவும் பாரதப் போரிலே நடந்த தாக்குதல் போலிருந்தது எனவும் கலித்தொகையில் குறிப்புகள் உள்ளன. காளை வலியிழந்தாலோ, வீரன் சேர்ந்தாலோ ஏறு தழுவுதல் நிறைவுபெற்றதாக அறிவிக்கப்படும் நிகழ்ச்சியின் முடிவில் அனைவரும் மன்றத்தில் கூடி குரவைக் கூத்தாடி மகிழ்வர். சங்க காலத்தில் திருமணத்தின் போது ஆண்களே பெண்களுக்கு பொருள்தரும் பழக்கம் இருந்தது என்றாலும் ஏறு தழுவிய ஆண்மகனிடம் பொருள் (முலை விலை - பரிசம்) பெறுவதில்லை என்ற பழக்கம் கொண்டிருந்தனர். முல்லை நிலமக்கள் என்பதை,

“எளியவோ ஆயமகள் தோள்

விலை வேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்

கொலையேற்றுக் கோட்டிடைத் தாம் வீழ்வார் மார்பின்

முலையிடைப் போலப் புகின்”

எனும் பாடலடிகள் சுட்டுகின்றன (Puliyur Kesiken, 2019).

## காளையும் கடவுளும்

ஆயர்குல இளைஞர்கள் வீறு கொண்டு எழுந்து வரும் ஏறுகளைத் தெய்வத்திற்கு சமமாக எண்ணினர். பாய்ந்து வருகின்ற காளைகளுக்குத் தெய்வத்தின் பெயர்களையும் இட்டு அழைக்கின்றனர். சோழன் நல்லுருத்திரன் பாடல்களில் காளைகள் கடவுளரோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. முல்லைக்கலி நான்காம் பாடலில் காளைகள் பலவித வண்ணங்களில் தொழுவத்திற்கு அணிவகுத்து வரும் காட்சி காட்டப்பட்டுள்ளது. வெண்மை நிறமுடைய பலராமன் போல் ஒரு காளை, திருமாலைப் போல கரிய நிறத்தில் ஒரு காளை, சிவபெருமானின் சிவந்த நிறத்தில் ஒரு காளை என்று கடவுளரோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளன. கொம்புகள் வளைந்த நிலையில் இருக்கும் சிவப்புக் காளையைக் குறிக்கும் பொழுது சிவபெருமான் சூடியுள்ள பிறைச் சந்திரனை உவமையாக்கியுள்ளார் புலவர் என்பதை “கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல்வளையுபு மலிந்த கோடணி சேயும்” (மு.க.3) என்ற பாடலடி மூலம் அறிந்து கொள்ளலாம்.

## ஏறு தழுவுதல்

சங்கத் தமிழகம் வீரயுகம் சார்ந்ததாக இருந்தது. வீரயுகத்தின் வெளிப்பாடாக மக்களின் அன்றாட வாழ்க்கை சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளும் அமைந்தன. அவர்தம் வீரத்தின் அளவுகோலாக ஏறுதழுவுதல் இருந்தது. வீரம் சான்ற காளையை அடக்குதல் வீரர்களின் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாக இடம்பெற்றது. காளையை அடக்குதல், வீரத்தின் வெளிப்பாடாக அமைந்ததற்குரிய காரணங்கள் ஆராய்வதற்குரியன. ஏறுதழுவும் இடம் தொழூஉ எனப்பட்டது. அகன்ற அப்பகுதியில் காளைகள் பாய்ந்து வந்தன. அவற்றை வீரர்கள் அடக்கினர். அவ்விடத்தே வீரர்களின் வீர நிகழ்வைக் காணக் குழுமும் பெண்களின் இருப்பிடமாகப் பரண் அமைக்கப்பட்டது. பரண்களின் மேலிருந்தவாறு பெண்கள் வீரர்களின் ஏறுதழுவும் காட்சிகளைக் கண்டு மகிழ்வர். “பல்ஆன் பொதுவர் கதழ்விடைக்கோள் காண்மார் முல்லையும் முகையும் இருந்தும் நிரைத்தன்னபல்லர் பெருமழைக் கண்ணர் மடம்சேர்ந்தசொல்லர் கடரும் கனங்குழைக் காதினர்நல்லவர் கொண்டார் மிடை” என்னும் பாடலடிகள் விரைந்து வரும் காளைகளை அடக்க வரும் வீரர்களைக் காண்பதற்காகப் பெண்கள் பரணைக் கைக் கொண்டனர் என்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றன. மேலும் தொழூஉவானது நறுமணம் கமழும் இடமாகவும் ஏறுகளின் பாய்ச்சல் காரணமாக துகள் எழுந்த இடமாகவும் திகழ்ந்தது என்பதை,

“அவ்வழி முழக்கென, இடியென, முன்சமத்து ஆர்ப்ப-வழக்குமாறு கொண்டு, வருபுவருபு ஈண்டி-நறையொடு துகள்எழ நல்லவர் அணிநிற்பத்” எனும் பாடலடிகள் சுட்டுகின்றன. கலித்தொகையின் பதினேழு பாடல்களில் முதல் ஏழு பாடல்கள் முல்லைத் திணையின் வீரவிளையாட்டினை எடுத்துரைக்கின்றன. ஏறு தழுவுதல் ஒரு ஆண்மகனின் கடமையாகும். கொல்லேற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை ஆயமகள் மறுபிறப்பிலும் தழுவமாட்டாள் என்பதை பறை சாற்றும் விதமாக “கொல்ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாளே, ஆயமகள்” (Puliyur Kesiken, 2019) இப்பாடலடிகள் அமைந்துள்ளன.

## ஏறு தழுவும் முன் நிகழ்த்தும் சடங்குகள்

எடுத்த செயல்கள் யாவினும் வெற்றி பெற இறைவனை முதலில் வணங்கும் மரபு தமிழர்களிடம் இயல்பாகவே இருந்து வந்துள்ளது. அது புனிதத் தன்மையோடு தொடர்புகொள்ள மேற்கொள்ளப்படும் முறையான செயல் என்று அர்னால்டு வான் கென்னப் கூறுகிறார் (Bhaktavatsala Bharathi, 2019). ஏறுதழுவும் இளைஞர்களுட் தொழூஉவினுள் புகுவதற்கு முன்னர் நீர்த்துறையிலும் ஆலமரத்தின் கீழும் பழமையான வலிமை பொருந்திய மரங்களின் கீழும் உறையும் தெய்வங்களை முறையாக வழிபட்டனர் என்பதை,

“துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்

முறையுளி பராஅய் பாய்ந்தனர் தொழூஉ”

நல்லந்துவனார் வரிகளின் மூலம் அறிய முடிகிறது (Subramaniyan, 2009). இயற்கையை வழிபட்ட தமிழர்களின் மாண்பினையும் இதனால் அறியலாம்.

## ஏறு தழுவும் முன் பறை சாற்றுதல்

சங்க காலத்தில் முல்லை நிலத் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள விரும்பிய ஆடவன் தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்த வேண்டும். தலைவியின் இல்லத்தில் காளை ஒன்று செருக்கும் வலிமையும் மிக்கதாக வளர்க்கப்பட்டு வரும். அக்காளையை ஆடவன் ஏறு தழுவுதலில் கலந்து கொண்டு அடக்கிக் காட்ட வேண்டும். அவ்வாறு அடக்கிக் காட்டுபவனுக்கே அப்பெண் உரிமைப்பட்டவன் ஆவாள்.

“முள்ளயிற்று ஏஎர் இவளைப்பெறும் இதுஓர்

வெள்ஏற்று எருத்து அடக்குவான்……

என்றாங்கு

அறைவனர்”

என்னும் பாடலடிகள் ஏற்றை அடக்குபவனேத் தலைவியைப் பெற இயலும் என்று முரசறைந்து அறிவிக்கப்பட்ட தன்மையினைத் தெரிவிக்கின்றன (Subramaniyan, 2009). பொது இடங்களில் மக்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு முரசறைந்து தகவலை அறிவிக்கும் தன்மையினை இதனால் அறிய இயலுகின்றது. தொழுவில் காரி புள்ளிகளை உடைய வெண்மையான காளை, வளைந்த கோடுகளைக் கொண்ட சிவந்த காளைகள்இ கபிலை நிறமுடைய ஏற்றினைப் பற்றிய குறிப்பும் உள்ளன. மேகக் கூட்டங்கள் திரண்டு எழுந்ததைப் போல தொழுவினுள் புகுந்தன என்பதைக் கலித்தொகை புலப்படுத்துகிறது. ஏறுகளைத் தழுவுதற்குள் களம் புகுந்த வீரர்கள் எருதுகளின் கொம்புகளைப் பிடித்து மார்பிலே பொருந்தும்படி தழுவினர். சிலர் கழுத்திடத்தே அடங்கின் கிடந்து அக்காளையின் திமிலைத் தழுவினர். சிலர் தோளுக்கு நடுவே கழுத்தைப் புகவிட்டு இறுகப் பற்றிக் கிடந்தனர். சிலர் கொம்புகள் தம்மீது படுவதை அஞ்சாது ஏற்றுக் கொண்டனர்.

“மருப்பில் கொண்டும் மார்பு உறத் தழீஇயும்

எருத்திடை அடங்கியும் இமில் இறப் புல்லியும்

தோள் இடைப் புகுதந்தும் துதைந்தபாடு ஏற்றும்

நிரைபு மேல் சென்றார்”

என்னும் பாடலடிகள் ஏறுதழுவிய வீரர்களின் தன்மைகளைக் குறிப்பிடுகின்றன (Subramaniyan, 2009). ஏறுதழுவிய வீரர்களின் எதிர்ப்புக்கு ஏறுகளின் கொம்புகளும் தாழ்ந்தன. ஏறு தழுவிய வீரர் தன் நெடிய தோளால் ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவினான். அதன் இமிலிடத்தே தோன்றி அவ்வேற்றைப் பெரிதும் வருந்தினான். ஏற்றிற்குத் தாளாமல் பல வீரர்களும் கலங்கிய நிலையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வீரர்கள் காளையை அடக்குதல்

ஏறு தழுவ வந்த வீரர்களை காளைகள் சிதைத்த காட்சிகள் பலவும் நெய்தற்கலியில் இடம்பெற்றுள்ளன. தன்னைத் தாக்க வந்த இளைஞனைச் சாவக் குத்தி தன் கொம்புகளுக்கு இடையில் கொண்டு அவனுடலைச் சாய்க்கின்றனவாய் எருதுகள் திகழ்ந்தன. வீரர்களைத் தாக்கிப் பாய்ந்த காளைகள் காண்பதற்குத் துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து பகைவர் நடுவே தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமனைப் போலவும் எருமைக்கடா மீது ஏறி வரும் கூற்றவனுடைய நெஞ்சைப் பிளந்து

குடரைக் கூளிக்கு இடும் பசிய நிறத்தை உடைய கடவுளைப் போலவும் தன் தந்தையைக் கொன்றவனைத் தன் ஆற்றலின் வலிமையால் தலையைத் திருகிக் கொன்ற அசுவத்தாமனைப் போலவும் காட்சியளித்தன வலிமை வாய்ந்த தம் கோடுகளில் குருதி சாய்ந்த குடல் சூடியவையாகவும் ஏறுகள் திரிந்தன அத்தகைய ஏறுகளையும் அஞ்சாமல் வீரர்கள் அடக்கினர்.

"குருதிக் கோட்டொடு குடர் வலந்தன

கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த ஏற்றின்முன்

ஆடிநின்று அக்குடர் வாங்குவான் பீடுகாண்"

என்னும் பாடலடிகள் ஏறுகள் குடர்சூடித் திரிந்த காட்சிகளை எடுத்துரைக்கின்றன (Subramaniyan, 2009). ஏறுகளின் அழகிய மருப்பினால் குத்திச் சரிந்த குடர்களைப் பருந்துகள் பற்றிக் கொண்டு மேலே சென்றன. அவற்றிடமிருந்து தவறி விழுந்த குடர்கள் ஆலமரத்தின் மீதும் கடம்பமரத்தின் மீதும் வீழ்ந்து அங்கு வாழும் தெய்வங்களுக்கு சூட்டப்பட்ட மாலைகளைப் போல காட்சியளித்தன. இவ்வாறு ஏறுகள் வலிமையின் சிம்மங்களாகத் தொழூஉவிலே திரிந்தன ஏறுதழுவுதலின் நிறைவு. ஏறு தழுவிய பின்னர் தொழூஉவினது பாண்டவரும் நூற்றுவரும் போரிட்ட போர்க்களத்தையும் இருபெரு வேந்தர்கள் தம்முள் மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்க்களத்தையும் ஒத்துக் காணப்பட்டது. புழுதிபாய்ந்து காணப்பட்டது. புழுதி பாய்ந்து காணப்பட்ட களத்தில் வீரர்கள் காளைகளை அடக்கிய போது அவர்களது வெற்றி அறிவிக்கப்பட்டது. தலைவன் கொல்லேற்றினைத் தழுவிக் கொண்டமையால் தனக்கு ஏற்படும் இன்பத்தைத் தலைவி தான் மோர் விற்றுச் சேர்த்த செல்வத்தைப் போன்றது என்று மகிழ்கிறாள். கொல்லேற்றுக் கோட்டினைத் தழுவ அஞ்சும் ஆயனை மறுமையிலும் தலைவி புல்லுவதில்லை. ஏறு தழுவிய வீரனுக்குத் தலைவியை அவளுடைய தமர் விருப்பத்துடன் தமர் மகிழ்ந்தனர் என்பதனை,

"திண்தோள் திறல்ஒளி மாயப்போர் மாமேனி

அம்துவர் ஆடைப் பொதுவனோடு ஆய்ந்த

முறுவலான மென்தோள் பாராட்டி சிறுகுடி

மன்றம் பரந்தது உரை"

என்னும் பாடலடிகளால் அறிய இயலுகின்றது. அவ்விடத்தே மக்கள் குரவைக் கூத்தாடி மகிழ்ந்தனர் (Subramaniyan, 2009).

## ஏறு தழுவியமைக்கானக் காரணங்கள்

ஏறு தழுவுதல் சிறந்த வலிமையை வெளிப்படுத்தும் நிகழ்வாக இருந்துள்ளது. எனினும் ஏறு தழுவுதல் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. ஏறு தழுவுதல் திருமணத்திற்கானத் தகுதி காணும் முறையாகக் காண இயலுகின்றது. ஏறு தழுவுதல் எக்காரணத்தினால் திருமணத்திற்கான தகுதியாகக் கொள்ளப்பட்டது என்று சிந்திக்க இடம் உள்ளது. வேட்டைச் சமூக நாகரிகமாயினும், வேளாண்மைச் சமூக நாகரிகமாயினும் காளைகளின் தேவை இன்றியமையாததாக இருந்தது. தொடக்கத்தில் வேட்டைச் சமூகத்தில் உணவுப் பொருளாகப் பயன்பட்ட மாடுகள் பின்னர் வேளாண்மைச் சமூகத்தில் செல்வத்தின் அடையாளமாக உருமாறுகின்றன. இதன் காரணத்தை எண்ணிப் பார்க்க இடமுள்ளது. காளைகள் விவசாயத்திற்கு இன்றியமையாத விலங்காகப் பயன்பட்டுள்ளன. மேலும் விவசாயத்தின் மூலம் கிடைத்த கூலங்களை பிற நிலங்களுக்கு எடுத்துச் சென்று பண்டமாற்று செய்வதற்கும் காளைகள் பயன்பட்டன. போக்குவரத்திற்குரிய சிறந்த விலங்காகவும் காளைகள் பயன்பட்டுள்ளன. எனவே காளைகளை மிகுதியாக வைத்திருப்பவன் சிறந்த செல்வந்தனாகப் பழங்காலத்தில் திகழ்ந்துள்ளான். இற்றைக் காலத்தில் பணம் என்னும் பொருளை வைத்து மாடுகளைச் சந்தைகளில் வாங்குவதுபோல அக்காலத்தில் மாடுகளைப் பொருள் படைத்தவன் வாங்கிவிடஇயலாது. மாடு வைத்திருக்க விரும்புவோர் மாடு பிடிப்பதில் திறமையானவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் காட்டிற்குச் சென்று காடுகளிலே சுற்றித் திரியும் வலிமை வாய்ந்த காளைகளை

அடக்கி வீட்டிற்குக் கொண்டுவர வேண்டும். அவ்வாறு கொண்டு வந்த காளைகளை உரிய முறையில் பழக்குதல் வேண்டும். பழக்கிய மாடுகளே வேலைகள் செய்ய மனிதனுக்கு உதவின. இற்றைக் காலத்தில் காட்டில் வாழும் மாடுகளின் வலிமையும் முறுக்கேறிய தோற்றமும் வெறித்தப் பார்வையும் அச்சத்தைத் தரத்தக்கவையே. பொதுவாக மாடுகளை அவ்வளவு எளிதில் பழக்கிவிட இயலாது என்பது அறிவியலாளர்களின் கருத்தாகும். மாடுகளை மனிதன் வீட்டு விலங்காகப் பழக்கப்படுத்தியதே மனிதனுடைய பெரிய வெற்றி என்று அறிவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இக்கருத்தினையும் வைத்துக் கொண்டு பார்க்கும் போது ஏறுகளை அடக்கும் வலிமை பெற்றவனே பெரும் செல்வந்தனாக முடியும் என்ற நிலை அக்காலத்தில் இருந்தது என்பதனையும் அறிய முடிகின்றது. தன் மகளைத் திருமணம் செய்யும் ஒருவன் தகுதி வாய்ந்த ஒருவனாக இருக்க வேண்டும் என்று தமர் அக்காலத்தில் விரும்பியது இயல்பே ஆகும். எனவே ஏறு தழுவுதல் தகுதியை உணர்த்தும் வீரச்செயலாக அக்காலத்தில் நிலவியதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

சமுதாய அமைப்பு முதலில் தோன்றிய முல்லை நில மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகத் திகழ்ந்தது ஏறுதழுவுதல். ஆயர் குலத்தவர்கள் தாம் பின்பற்றிய பழக்கவழக்கங்களில் ஒன்றாக ஏறுதழுவுதலைக் கடைபிடித்தனர். காளையை தம் கடவுளாக நினைத்து வழிபட்டனர். மணச்சடங்கின் போது பெண் எருமையின் கொம்பை வழிபட்டுச் சடங்கு செய்தனர். குடும்ப விருத்திக்காக இதன் குலம் செழித்து வளர வேண்டும் என்பதற்காக பெண்கள் எருமைக் கொம்பை வழிபட்டனர். இவ்வாறு முல்லை நில மக்கள் வாழ்வில் பல பழக்கவழக்கங்களைப் பின்பற்றினர். இன்றைக்கும் ஒரு சில இனத்தவர்களின் திருமணவாழ்க்கை நடைமுறையில் இத்தகைய பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## References


Bhaktavatsala Bharathi, (2019) Panpattu manidaviyal, Meyyappan pathippagam, Chidambaram, India.

Manikavasagan, G., (2007) Purananooru moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Puliyur Kesiken, (2019) Kalithogai, Paari Nilaiyam, Chennai, India.

Seyaraman, Na., (2014) Kaalam kanda karuthukal, Kumaran Publisher, Parthasarathypuram, Chennai, India.

Subramaniyan, K., (2009) Sangakala Samuthayam, New Century Book House, Chennai, India.

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License